DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF PROCEDURE
IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, VELLORE DISTRICT

| | |
|---|---|
| Name: தட்சிணாமூர்த்தி | Father's Name: ராமசாமி |
| Village: தும்பேரி | Taluk: |
| Caste: | Calling: |
| Religion: | Age: 58 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 27.09.2022

**O.S. 82/2016 - DW2**

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u> –

01) நான் பிரதிவாதியின் பங்காளி என்றால் ஆமாம் அவர் எனது அண்ணன் மகன் முறையாவார். மாணிக்கத்திற்கும், வெங்கடேசனுக்கும் இடையே ஏற்பட்ட வழக்கு பிரச்சனைகள் எனக்கும் தெரியும் என்றால் சரிதான். வாதி, பிரதிவாதி இருவருக்கும் இடையே அடிதடி தகராறு ஏற்பட்டு காவல் நிலையம் சென்றதும், அங்கு விசாரிக்கப்பட்டதும், மருத்துவமனை சென்றதும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் எனது சாட்சியத்தில் 2 வது பத்தியில் சொல்லியுள்ள 27.12.1999 தேதியிட்ட மாணிக்கம் பெயரிலான கிரையப்பத்திரத்தை பார்த்திருக்கிறேனா என்றால் பார்த்ததில்லை.

02) வழக்கு சொத்து சர்வே எண் என மாணிக்கம் சொல்லும் சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மாணிக்கம் வழக்கு சொத்து சர்வே எண்ணாக 165/5 என குறிப்பிட்டுள்ள சொத்தில் பிரதிவாதிக்கு உரிமை உண்டா என்றால் அவருக்கு உரிமை உண்டா என்று எனக்கு தெரியாது. வழக்கு சொத்திற்கு வடக்கில் பிரதிவாதிக்கு சொந்தமான சர்வே எண்.165/1 பி சொத்து அமைந்துள்ளது என்றால் சரியல்ல, மாணிக்கம் சொத்திற்கு வடக்கிலும், தார்சாலைக்கு தெற்கிலும் பிரதிவாதியின் சொத்து அமைந்துள்ளது.

03) வெங்கடேசனுக்கு சொந்தமான சர்வே எண்.165/1 பி சொத்தானது வருவாய்த்துறை ஆவணங்களிலும், நடைமுறையிலும் முக்கோண வடிவில் தான் உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் இல்லை அந்த சொத்து நேராக சதுரமாக உள்ளது. வெங்கடேசன் சொத்திற்கு வடக்கில் தார்ரோடு உள்ளது என்றால் சரிதான். தார்ரோடிற்கு வடக்கிலும் வெங்கடேசன் சொத்து உள்ளது என்றால் ஆமாம் உள்ளது. வெங்கடேசன் சொத்துக்களுக்கு நடுவில் செல்லும் தார்ரோடிற்காக இடம் கொடுத்தது வெங்கடேசன் வகையறா என்றால் சரிதான்.

04) எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ள தேக்கு செடிகள் மூன்றிற்கு தற்போது என்ன வயது இருக்கும் என்றால் எனக்கு தெரியவில்லை. எனது முதல் விசாரணையில் 2 வது பத்தியில் சர்வே எண்.165/1 பி சொத்து முக்கோண வடிவில் உள்ளதாக நான் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல அந்த சொத்து நேராக தான் உள்ளது. சாட்சியிடம் முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் 2 வது பத்தியில் கடைசி 3 வரியிலும் சர்வே எண்.165/1 பி சொத்தானது முக்கோண வடிவில் இருப்பதாக குறிப்பிட்டுள்ளதை காண்பித்து கேட்டதற்கு சாட்சி மீண்டும் முக்கோண வடிவில்

இல்லை நேராக உள்ளது என்று சாட்சியமளிக்கிறார். அப்படியென்றால் முதல் விசாரணை சாட்சியத்தில் தவறாக சொல்லியிருக்கிறேனா என்றால் தெரியவில்லை.

05) வாதி வருவாய்த்துறை ஆவணங்களை போலியாக தயாரித்திருப்பதாக நான் தெரிவித்துள்ளது எதனடிப்படையில் சொல்கிறேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதி தாக்கல் செய்த வழக்குரையை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்க்கவில்லை. மாணிக்கம் சொத்தும், வெங்கடேசன் சொத்தும் ஒரே மட்ட அளவுகளில் அமைந்துள்ளதா என்றால் இல்லை வெங்கடேசன் சொத்து அரை அடி பள்ளத்திலும், மாணிக்கம் சொத்து மேடாக உள்ளது. சொத்தை சேர்க்க வேண்டும் என்றால் பள்ளத்தில் உள்ள சொத்திலிருந்து தான் மேட்டை கழித்து சேர்த்து கொள்ள இயலும் என்றாலும், மேட்டில் இருப்பவர் அதுபோன்று சொத்தை சேர்க்க இயலாது என்றாலும் சரிதான்.

06) நீதிமன்றத்திலிருந்து நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை பார்வையிட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது பிரமாண வாக்குமூலத்தில் 5 வது பத்தியில் சொத்தை அளந்து அத்து காண்பித்த பிறகும் வீண் பிரச்சனை செய்து வருவதாக சொல்லியுள்ளதில், யார் சொத்தை அளந்து அத்து காண்பித்தது என்றால் எனக்கு தெரியாது. வெங்கடேசன் அப்பா சொத்தினை பொறுத்து 1989 ஆம் ஆண்டில் பாகப்பிரிவினை செய்துகொண்டதாக சொல்லும் பாகப்பிரிவினையின்படி யார் யாருக்கு எவ்வளவு சொத்து பிரித்து கொடுக்கப்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

07) இந்த வழக்கில் மாணிக்கம் என்ன பரிகாரம் கேட்டுள்ளார் என்பதும், எவ்வளவு நீதிமன்ற கட்டணம் செலுத்தியுள்ளார் என்பதும் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் எனது பங்காளியான பிரதிவாதிக்கு ஆதரவாக இந்த வழக்கில் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிவுற்றது.